## தலைப்பு 256 – கம்பஹா மாவட்ட செயலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள்,

செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என கூற முடியாதிருந்தது. அதற்கிணங்க முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பண “பீ” கணக்கு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இறந்த, ஓய்வுபெற்ற, வேலை இடைநிறுத்தப்பட்ட அல்லது பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,868,068 கூட்டுமொத்தமான கடன் மீதிகளை முறையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 5 ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ந்து காணப்படுகின்ற கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,098,298 தொகை ஆகும். | மீதிகளை அறவீடு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 6000-0-0-16-31 ஆம் இலக்க | நிதிப்பிரமாணம் 571 | தீர்ப்பனவு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| பொது வைப்புக் கணக்கின் கீழ் வைப்புச் செய்யப்பட்டு 2 ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ச்சியாக காணப்படுகின்ற ரூபா 12,201,152 பெறுமதியான 214 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 1.6.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளை முறையாக செயற்படுத்துவதற்காக அக்கபூர்வமான நடைமுறையொன்று காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.6(அ) பந்தியின் கீழுள்ள அவதானிப்புக்களின் பிரகாரம் அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை . | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது, மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களை மேவுகை செய்து கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் காலாண்டு ரீதியாக நடாத்தப்படுவதனால் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் அரசாங்க கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றன. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) குறைத்து மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டமை** | | |
| நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் 06 செலவின விடயங்களிற்குரிய ரூபா 13,437,000 தொகையான நிதியேற்பாடு ஏனைய செலவின | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சாத்தியமானளவு சரியாக மதிப்பீடுகள் | எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட தளம்பல்கள், மின்சார கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, புதிய நிர்மாணங்களில் ஏற்பட்ட |

| | | |
|---|---|---|
| விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் 12 சதவீதம் முதல் 315 சதவீதம் வரையான விச்சினை மாற்றப்பட்ட நிதியேற்பாடு பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. | தயாரிக்கப்பட வேண்டும். | தாமதங்கள் மற்றும் பயிற்சி செயற்பாடுகளை நடாத்த தவறியமை போன்ற காரணங்களினால் அச் செலவின விடயங்களில் சேமிக்கப்பட்ட நிதியேற்பாடு மாற்றப்பட வேண்டியிருந்தன. |
| **(ஆ) மேலதிக நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டமை** | | |
| 04 செலவின விடயங்கள் தொடர்பாக ரூபா 11,097,000 தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததால் நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஏனைய செலவின விடயங்களிற்கு மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் 10 சதவீதம் தொடக்கம் 68 சதவீதம் வரை மாற்றம் செய்யப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சாத்தியமானளவு சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | மேலதிக மாவட்ட செயலாளர் பிரயாணச் செலவினங்களை கோராதமை, மாவட்ட பொறியியலாளர் பிரசவ விடுமுறை பெற்றுக்கொண்டமை மற்றும் விலைவீதங்கள் தொடர்பாக கழிவுகள் பெறப்பட்டமை போன்ற காரணங்களினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| **(இ) நிதியேற்பாடுகளை சேமித்தல்** | | |
| நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் வகைமாற்ற நடைமுறையின் கீழ் செலவினங்களின் ஆரம்ப மதிப்பீட்டிற்கு மேலதிகமாக 03 செலவின விடயங்களிற்காக ரூபா 4,100,000 தொகையான மேலதிக நிதியேற்பாடு பெறப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக நிதியேற்பாடுகளின் மேலதிக சேமிப்புக்களில் ரூபா 246,998 பெறுமதியான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 94 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த மேலதிக நிதியேற்பாட்டில் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படக் கூடாது. | 2017 ஆம் ஆண்டிற்குரிய பொறுப்புக்கள் 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டிலிருந்து அவற்றிற்காக குறித்த சில பயன்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| **(ஈ) மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தமை** | | |
| புதிய மாவட்டச் செயலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததால் இது தொடர்பாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் வருடாந்த | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சாத்தியமானளவு சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | புதிய மாவட்டச் செயலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் பெறுகைக் குழு மற்றும் |

| | | |
|---|---|---|
| மதிப்பீடுகள் ஊடாக ரூபா 650 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிற்காக பெறுகைக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. பெறுகைக் குழுவால் அங்கீகரிக்கப்படாத செயற்திட்டத்திற்காக ரூபா 650 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததால் அரசாங்கத்தின் மொத்த பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 650 மில்லியனால் அதிகரித்திருந்தது. | | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பவற்றின் அங்கீகாரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் அங்கீகாரங்கள் பெறப்பட்ட பின்னர் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |

**2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நானாவித செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் கம்பஹா மாவட்டச் செயலகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 5,997,683,528 கூட்டுமொத்தமான நிதியேற்பாட்டில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,717,960,354 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை முறையாக பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற தன்மை காரணமாக செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதில் சிக்கல்கள் காணப்பட்டன. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டங்களை அடைந்துகொள்ளத் தவறியமை**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அனர்த்தங்களை குறைப்பதற்கான செயற்திட்டங்கள் | | |

---------------------------------------------------------

---

2015-2017 காலப்பகுதியின் போது கம்பஹா மாவட்டத்தில் வெள்ளத்தினால் ஏற்பட்ட அனர்த்தங்களை குறைப்பதற்கு 15 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திலிருந்து ரூபா 66,562,735 தொகையான நிதியேற்பாடு பெறப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 59,038,484 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 7,524,250 மீதி அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

நிதியேற்பாடுகளை அனுப்பாமல் முறையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நிலத்தின் தன்மையை குறிப்பாக இனங்காண்பதற்காக தொழில்நுட்ப முறைமைகள் பின்பற்றப்பட வேண்டும்.

வெள்ளத்தினால் ஏற்பட்ட அனர்த்தங்களை குறைப்பதற்கான செயற்திட்டங்கள் (கால்வாய்களின் புனரமைப்பு) சதுப்பு நிலங்களிற்கு அருகில் அமுல்ப்படுத்தப்படுவதால் அவற்றை கவனத்தில் கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். சதுப்பு நிலங்களுக்கு அருகிலுள்ள நிலத்தின் தன்மையை குறிப்பாக தீர்மானிப்பதற்கு சாத்தியமற்றிருப்பதால் நீளம், அகலம் மற்றும் உயரத்திற்கான அண்ணளவான பெறுமதிகளை கருத்தில் கொண்டு மதிப்பீடுகள் தயாரிப்பதை விட ஏனைய முறைமை எதுவும் காணப்படவில்லை. இதனால் நீளம் மற்றும் அகலத்திற்காக ஒழுங்கற்ற பெறுமதிகளை இட்டு மதிப்பீடுகளை தயாரிப்பதற்காக சராசரிப் பெறுமதிகள் எடுக்கப்படுகின்றன. இதனால் இத் தன்மையான செயற்திட்டங்களிற்கு பயன்படுத்தப்படுகின்ற நிதி தொகைகள் தளம்பலடைய முடியும் என களப் பொறியியலாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அக் காரணங்களால் இறுதிக் கொடுப்பனவு மதிப்பிடப்பட்ட பெறுமதியை விடக் குறைவாக காணப்பட்டது. எனினும் செயற்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததென மாவட்டப் பொறியியலாளர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு என்பன அவதானித்திருந்தன.

## 3.2 அரைவாசியில் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டின் இறுதியளவில் கம்பஹா மாவட்டத்திலுள்ள பல பிரதேச செயலகங்களால் செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இக் காரணத்தால் சில செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் 50 சதவீதத்தை விடக் குறைவாக காணப்பட்ட அதே நேரம் குறித்த சில செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,282,408,701 பெறுமதியான 931 செயறதிட்டங்கள் 08 பிரதேச செயலகங்களால் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டங்களிற்காக நிதிகள் விடுவிக்கப்படக் கூடாது, குறித்த சில செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு காலம் போதாதுள்ளது என பிரதம அமைச்சர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட 2018/11/08 ஆம் திகதிய கடிதம் அறிவித்திருந்தது. அக் காரணங்களினால் செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் குறைவாக காணப்பட்டது. எங்களது கட்டுப்பாட்டிற்கு அப்பால் நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் மோசமானதாக காணப்பட்டதென அறிவிக்கப்படுகின்றது. |
| (ஆ) | கம் பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 228 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக ஜா எல பிரதேச செயலகத்திற்கு ரூபா 186,700,000 பெறுமதியான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 26,859,995 பெறுமதியான 46 செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்குப் பொறுப்பாக ஜா எல நகர சபை காணப்பட்டது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருக்காத செயற்திட்டங்கள் மற்றும் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் என்பன 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பூர்த்தி | நிறைவேற்றப்பட்ட வேலைகளை பரீட்சித்த பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் போலியான விலைப்பட்டியல்களை சமர்ப்பித்தல் மற்றும் வேலைகளை முறையாக பூர்த்தி செய்யத் தவறியமை என்பவற்றிற்காக வினவப்பட வேண்டும். அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக அவற்றை பூர்த்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். போலியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட விடயத்தில் அவை தொடர்பாக | முழுமையான வேலைகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட அவ் விலைப்பட்டியல்களை பொருட்படுத்தாமல் நிறைவேற்றப்பட்ட வேலைகளிற்காக மாத்திரம் பிரதேச செயலாளரால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மிகுதி வேலைகளை தொடர்வதால் மீண்டும் நிதியேற்பாடு கோரப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டுள்ளதென குறிப்பிட்டு போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்த ஏழு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதால் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்காக ஜா எல பிரதேச செயலாளரிற்கு அவ் ஆவணங்களை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ரூபா 4,681,600 பெறுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட வேலைகளின் உள்ளபடியான பெறுமதி உண்மையிலேயே ரூபா 896,019 ஆக காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | புலனாய்வுகளை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | |
| (இ) | வத்தளை பிரதேச செயலகத்தில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 09 செயற்திட்டங்கள் தொடரப்பட்டிருந்தன. அதற்கான காரணம் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு காலம் போதாதமை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. காலம் போதாதமை என்ற காரணத்தை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அவ் 09 செயற்திட்டங்களில் 03 செயற்திட்டங்கள் 2019 மே வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியேற்பாடு ஆகக்கூடியளவு பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொடரப்பட்டிருந்த அவ் 09 செயற்திட்டங்களின் வேலைகள் 2019 யூன் 07 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 07 செயற்திட்டங்களிற்குரிய கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பிரதேச சபையிடமிருந்து ஏனைய உறுதிச்சீட்டுக்கள் பெறப்பட்டதும் மிகுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 நிதிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் செயன்முன்னேற்றமில்லாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மினுவாங்கொடை பிரதேச செயலகத்தில் வாழ்வாதார அபிவிருத்திக்காக பதிவு செய்யப்பட்ட 03 சங்கங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 2,889,650 தொகை உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் 2019 மே மாதம் வரையிலும் சங்கங்களின் வங்கிக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட நிதியேற்பாடு செயற்திறனாக பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றி அந்நிதிகள் உரிய சங்கங்களின் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தன. அந் நிதிகளை பயன்படுத்தும் குழுவமைத்தல் மற்றும் கடன் செயன்முறைக்குரிய கொடுப்பனவுகளை |

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளுதல் தொடர்பாக பின்னர் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (ஆ) வத்தளை பிரதேச செயலகத்தின் கிராம சக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிற்கு ரூபா 2,989,650 தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் சங்கமொன்றிற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 996,550 தொகையாகும். 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அச் சங்கங்களின் உள்ளபடியான செலவினங்கள் ரூபா 29,500, ரூபா 200,000 மற்றும் ரூபா 25,000 தொகையாகும். இதனால் சுற்று நிதியின் தொழிற்பாட்டிற்காக 2019 மே வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாமல் ரூபா 2,735,150 தொகை கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். | சனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றி அந்நிதிகள் உரிய சங்கங்களின் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தன. அந் நிதிகளை பயன்படுத்தும் குழுவமைத்தல் மற்றும் கடன் செயன்முறைக்குரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் தொடர்பாக பின்னர் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

**3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2014 யூலை 15 இல் மஹர பிரதேச செயலகத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த பணம் காணாமல் போனமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் நடாத்தப்பட்ட விசாரணை சபையின் இறுதி அறிக்கையின் பிரகாரம் ஒட்டுமொத்த மேற்பார்வைக்கும் பொறுப்பாக இருக்க வேண்டிய பிரதேச செயலாளர், கணக்காளர், நிதி உதவியாளர் மற்றும் காசாளர் ஆகியோரின் கடமைகளில் உள்ள குறைபாடுகள் அவ்வாறு காணாமல்போன பணத்திற்கு பங்களித்திருந்தன என அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் | உரிய அங்கீகாரம் பெறப்பட்டு பணம் அறவிடப்பட வேண்டும். | அதற்கிணங்க மாவட்டச் செயலாளரால் பரிந்துரைக்கப்பட்ட பின்னர் பிரதேச செயலாளர், கணக்காளர், நிதி உதவியாளர் மற்றும் காசாளர் ஆகிய (விசாரணைச் சபையின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு) பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அத்தகைய ரூபா 1,082,245.42 நட்டம் சமமாக அறவிடப்படுவதற்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை கோரி |

| | | | |
|---|---|---|---|
| | அலட்சியம் மற்றும் கவனமின்மை காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் அந் நான்கு உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டிருந்தது. அதற்கிணங்க நான்கு உத்தியோகத்தர்களிற்கிடையே ரூபா 1,082,245 நட்டம் சமமாக பிரிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும் என மாவட்டச் செயலாளர் பரிந்துரைத்திருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 06 இல் இது தொடர்பான அங்கீகாரத்திற்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் வேண்டப்பட்டிருந்தது. எனினும் 2019 மே வரையிலும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததால் நட்டத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட முடியாதிருந்தது. | | அவரிற்கு 2018 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததால் 2018 செப்தெம்பர் 19, 2018 ஒக்தோபர் 23, 2018 நவம்பர் 07 மற்றும் 2019 சனவரி 22 இல் நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டிருந்தன. |
| (ஆ) | மினுவாங்கொட பிரதேச செயலகத்திற்கு சொந்தமான கெப் வண்டியொன்று 1999 யூலை 09 இல் விபத்துக்குள்ளாகியிருந்தது. நிதிப்பிரமாணம் 104(3) இற்கிணங்க சேதங்கள் தொடர்பான பூர்வாங்க அறிக்கையின் பிரகாரம் விபத்தை விளைவித்த வாகனத்தின் சாரதி அதற்கு பொறுப்பாகவுள்ளதுடன் வாகன திருத்தங்கள் தொடர்பான செலவினங்கள் வாகனத்தின் காப்புறுதி பூட்கையூடாக அறவிடப்பட வேண்டும். அதற்கிணங்க ரூபா 204,360 தொகை வாகனத்தின் திருத்தங்களிற்காக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் வாகனத்தின் (Van) காப்புறுதிக் கம்பனி ரூபா 15,000 தொகையை மாத்திரம் செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. விபத்தை விளைவித்த சாரதிக்கெதிராக ரூபா 189,360 தொகையான சேதத்தின் மிகுதிப் பணத்தை அறவீடு செய்வதற்கு சட்டமா அதிபரால் வழக்கு தொடரப்பட்டுள்ளது. 2001 ஆம் | நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டாவது பிரதிவாதியின் வதிவிட முகவரியை கண்டறிய வேண்டுமென அவ் வழக்கு தொடர்பான 2013 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடிதம் ஊடாக கோரப்பட்டிருந்ததுடன் 2014 மார்ச் 04 இல் இரண்டாவது பிரதிவாதி வெளிநாடு சென்றிருந்தார் என அறிவிக்கப்பட்டிருந்தது. நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட இரண்டாவது பிரதிவாதியின் வெளிநாட்டு முகவரி தொடர்பான தகவல்கள் 2019 நவம்பர் 19 இல் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது இரண்டாவது பிரதிவாதி இலங்கைக்கு வந்துள்ளார். பரணம்பலம - 167/A கிராம உத்தியோகத்தர் பிரிவில் 355 A, பரணம்பலம உஸ்வெதகீயவவில் |

| | | |
|---|---|---|
| ஆண்டிலிருந்து 18 ஆண்டுகள் கடந்த பின்னரும் வழக்கை முடிவு செய்து அதன்மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வசிக்கின்றார் என 2019 மே 06 ஆம் திகதிய வத்தளை பிரதேச செயலாளரின் கடிதம் மூலம் அவர் அறிவித்திருந்தார். சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அத்தகவலை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| Theatre, Neonatology Unit மற்றும் இரத்த வங்கியை உள்ளடக்கி 2011/2012 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டு 2014 ஆகஸ்ட் மாதத்தில் திறப்பதற்கு அறிவிக்கப்பட்டிருந்த மினுவாங்கொட மாவட்ட வைத்தியசாலையின் கட்டிடத்தொகுதியில் இரத்த வங்கி மாத்திரம் முன்னைய ஆண்டு வரையிலும் தொழிற்பட்டிருந்தது. ஏனைய பிரிவுகள் 2014 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்படாதிருந்ததால் வளிப்பதனாக்கி முறைமை திருத்தப்பட வேண்டியிருந்தது. இதனால் அத் திருத்திற்காக மினுவாங்கொட பிரதேச செயலகம் ரூபா 1,000,000 தொகையை செலவிட்டிருந்தது. எனினும் Theatre கணக்காய்வுத் திகதியான 2019 மே 06 வரையிலும் தொழிற்படாதிருந்தது. | செயற்பாடற்ற பிரிவுகள் தொடர்பாக செலவினங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும். | சில சந்தர்ப்பங்களில் பிரதேச வைத்திய அதிகாரி பிரதேச அபிவிருத்திக் குழுவின் கூட்டங்களில் அத்தகைய குறைபாடு தொடர்பாக கருத்துரைகளை வழங்கியிருந்ததுடன் அதற்கிணங்க நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மேலும் Theatre, Neonatology Unit மற்றும் இரத்த வங்கி உள்ளடங்கிய கட்டிடத் தொகுதியை வசதிப்படுத்துவதற்காக வளிப்பதனாக்கி முறைமை திருத்தப்பட்டிருந்தது. தற்போது இரத்த வங்கி செயற்பாட்டில் உள்ளதுடன் Theatre செயற்பாடற்றுள்ளது. பிரதேச வைத்திய அதிகாரிக்கு இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.6 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வூதியப் பிரிவு | | |
| (i) | பிழையான கணிப்பீடுகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காதமை காரணமாக 11 பிரதேச செயலகங்களிற்குரிய 463 ஓய்வூதியர்களிற்கு ரூபா 56,757,594 தொகையான மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேலதிகக் கொடுப்பனவுக்காக அறவீடு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட மேலதிகக் கொடுப்பனவுகளில் ரூபா 8 மில்லியன் தொகை 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி தவணைகளில் அறவிடப்படுகின்றன. 2019 யூன் 30 இல் உள்ளவாறான அறவீட்டு செயன்முன்னேற்றம் தொடர்பான அறிக்கை உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரிற்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும். |
| (ii) | ஓய்வூதியத்தை பெறுகின்ற ஒவ்வொரு ஓய்வூதியரிற்கும் ஓய்வூதியக் கோவையொன்று பிரதேச செயலகங்களில் பேணப்பட வேண்டிய போதிலும் 09 பிரதேச செயலகங்களிலிருந்து ஓய்வூதியங்களை பெறுகின்ற 426 ஓய்வூதியர்களிற்கான கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | கோவைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கோவைகளில்லாத ஓய்வூதியர்களிற்குரிய தகவல்கள் பெறப்பட்டுள்ள போதிலும் ஓய்வூதியர்களின் முதுமை மற்றும் அவர்களது துணைகளின் தொழில் விபரங்கள் மற்றும் அலுவலகங்கள் தொடர்பாக W&OP இனை பெறுகின்ற பல நபர்கள் அறிந்திருக்காதமை போன்ற காரணங்களினால் தகவல்களை பெற்றுக்கொள்ளுதல் சிக்கலானதாக காணப்பட்டது. உரிய நபர்கள் வேலை செய்த நிறுவனங்களிலிருந்து தகவல்களை கோருவதன் மூலம் சில கோவைகள் தயாரிக்கப்பட்டிருந்தன. சில நிறுவனங்கள் மூடப்பட்டிருப்பதால் அத்தகைய |

| | | | |
|---|---|---|---|
| | | | நிறுவனங்களிலிருந்து தகவல்கள் பெற முடியாதிருந்தது. ஓய்வூதியத் திணைக்களத்தால் தற்போது வரை அங்கீகரிக்கப்படாத தற்காலிக கோவைகள் காலக்கிரமத்தில் அங்கீகாரத்திற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என உரிய உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (iii) | மஹர பிரதேச செயலகத்திலிருந்து அவரது ஓய்வூதியத்தை பெற்றிருந்த ஓய்வூதியரொருவர் 2015 திசெம்பர் 25 இல் இறந்திருந்தார். அவரது இறப்பிற்கு பின்னரும் வங்கிக் கணக்கிற்கு அவரது ஓய்வூதியம் செலவு வைக்கப்பட்டிருந்ததால் ரூபா 181,902 தொகை அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்தது. ஓய்வூதியரின் வாரிசு 2016 செப்தெம்பர் 14 இல் இறந்திருந்ததுடன் இறப்பு உரிய நேரத்தில் அறிக்கையிடப்பட்டிருக்காததால் இந்நிலைமை ஏற்பட்டிருந்தது. | மேலதிக் கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஓய்வூதியர் ஒருவர் இறக்கும் போது கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலாளரிற்கு அறிவிக்க வேண்டும். | அத்தொகையை அறவீடு செய்வதற்கு வாரிசு எவரும் காணப்படாததால் அறிவுறுத்தல்களை கோரி ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. |
| (iv) | 5/2015 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பள முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டிய 46 கோவைகள் 2019 சனவரி இறுதியளவில் மீரிகம பிரதேச செயலகத்தில் காணப்பட்டன. | முரண்பாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 5/2015 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 மே மாதமளவில் முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டிய 28 கோவைகள் காணப்பட்டன. அவற்றில் இராணுவத்தின் விதவைகளிற்குரிய 06 கோவைகள் காணப்பட்டன. முரண்பாடுகளை நீக்குவதற்கு தேவையான தகவல்கள் இராணுவத்திடமிருந்து கோரப்பட்டிருந்தது. எனினும் அத்தகைய தகவல்கள் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. கோவைகளில்லாத 06 ஓய்வூதியர்களிற்காக |

| | | | |
|---|---|---|---|
| | | | தற்காலிக கோவைகள் தயாரிக்கப்பட்டு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்தது. ஏனைய கோவைகள் தொடர்பாக சம்பளங்கள் சீராக்கம் செய்யப்பட முடியாதிருந்ததால் சம்பளப் படிமுறைகள் தொடர்பாக சம்பள ஆணைக்குழுவிடமிருந்து அறிவுறுத்தல்களை கோரி கடிதங்கள் அனுப்பட்டுள்ளன. |
| (v) | களனி பிரதேச செயலகம்<br>இறந்தமை தொடர்பாக அறிவிப்பதிலுள்ள தாமதம் காரணமாக வங்கிக் கணக்குகளிற்கு அனுப்பட்ட பணத்தை அறவீடு செய்வது கடினமான வேலையொன்றாக காணப்படுகின்றது. 21 சந்தர்ப்பங்களில் வங்கிக் கணக்குகளிற்கு ரூபா 17,658,002 தொகை அனுப்பப்பட்டிருந்த போதிலும் அப் பணத்தை அறவீடு செய்வதற்கு 1–7 ஆண்டுகள் எடுத்திருந்தன. இறப்பு தொடர்பாக அறிவிப்பதிலுள்ள தாமதங்கள் காரணமாக 22 வாரிசுகளிற்குரிய ரூபா 999,234 கூட்டுமொத்தமான ஓய்வூதியங்கள் 2016–2018 காலப்பகுதியின் போது வங்கிக் கணக்குகளிற்கு அனுப்பட்ட போதிலும் அப் பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இறப்பு தொடர்பாக அறிவிப்பதிலுள்ள தாமதங்களை தவிர்ப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று முறையாக ஸ்தாபிக்கப்பட வேண்டியதுடன் பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பணத்தை அறவீடு செய்வதற்கு முறைமையொன்று அமுல்படுத்தப்பட வேண்டும். | அனைத்து பணமும் வங்கிகளிலிருந்து அறவீடு செய்யப்பட்டுள்ளன. அப் பணம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு தற்போது அனுப்பப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>இறந்த ஓய்வூதியர்களிடமிருந்து இதுவரை ரூபா 744,301 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களில் சிலரிடமிருந்து ரூபா 254,933 தொகை பெறப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக வங்கிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனினும் காசோலைகள் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | கட்டான பிரதேச செயலகத்திற்குரிய ஓய்வூதியர்களின் இறப்புக்கள் தொடர்பாக கிராம உத்தியோகத்தர்கள் அறிக்கையிட்டிருக்காததன் காரணமாக ஓய்வூதியர்கள் இறந்த பின்னரும் பணம் வங்கிக்கு அனுப்பப்பட்டிருந்தது. அவ்வாறு அனுப்பப்பட்ட பணத்தில் 6 | ஓய்வூதியர்களின் இறப்புக்கள் தொடர்பாக பிரதேச செயலகங்களிற்கு அறிவிப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கிராம உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவது | ஓய்வூதியர்களின் இறப்பின் பின்னர் பிரதேச செயலகங்களிற்கு அறிவிப்பதற்கான முறைமை தொடர்பாக கிராம உத்தியோகத்தர்களிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இறந்த ஓய்வூதியர்கள் தொடர்பான மாதாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கிராம |

| | | | |
|---|---|---|---|
| | ஓய்வூதியர்களிடமிருந்து ரூபா 114,225 தொகை அறவிடப்பட முடியாதிருந்தது. | அவசியமானதாகும். | உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஓய்வூதியர்கள் இறந்த பின்னர் வங்கிகளிற்கு செலவு வைக்கப்பட்ட பணத்தை கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக வாரிசுகளிடமிருந்து அறவீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (vii) | ஜாஎல பிரதேச செயலகத்தால் ஓய்வூதியரொருவரிற்கு இரட்டை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் ரூபா 358,057 தொகையான ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது என 2015 செப்தெம்பர் 03 இல் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. 2015 நவம்பர் மாத்திலிருந்து ரூபா 5,000 மாதாந்த தவணைக் கட்டணங்களாக அறவீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 23 இல் ஓய்வூதியர் இறந்திருந்தார். ரூபா 343,057 தொகையான மீதி தற்போது அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 மே வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரட்டை ஓய்வூதிக் கொடுப்பனவை பரீட்சிப்பது அவசியமானதாகும். பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேலதிகக் கொடுப்பனவு அறவீடு செய்யப்பட வேண்டும். | ஓய்வூதிய மேலதிகக் கொடுப்பனவின் அறவீடு தொடர்ச்சியாக பரீட்சிக்கப்பட்டிருந்தது. மேலதிகக் கொடுப்பனவு தவணைகளாக அல்லது முழுமையாக அறவிடப்படும். வங்கிக் கணக்குகளிலுள்ள பணம் உடனடியாக அறவீடு செய்யப்பட்டு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு மாற்றப்படும். |
| (viii) | பிரதேச செயலக பிரிவில் வசிக்கின்ற ஓய்வூதியர்கள் தொடர்பாக அலுவலகத்தில் பேணப்படுகின்ற தனிநபர் கோவைகளிற்கும் ஓய்வூதிய தரவுத் தளத்திற்கும் இடையே சரியான தொடர்பு காணப்பட வேண்டிய போதிலும் தேசிய அடையாள அட்டை இல்லாமல் அல்லது தரவுத் தளத்திற்கு மோசடியான முறையில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை தரவேற்றம் செய்து ஓய்வூதியங்கள் செலுத்தப்பட்டிருந்த 4 பிரதேச செயலகங்கள் தொடர்பாக 82 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. | தகவல்களை சரிபார்த்த பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய ஓய்வூதியர்களின் தேசிய அடையாள அட்டையை குறிப்பிடத் தவறியதற்கான காரணம் அவர்கள் தேசிய அடையாள அட்டைகளை பெற்றிருக்காதமை ஆகும். உரிய கோவைகள் நன்றாக பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் தேசிய அடையாள அட்டை இலக்கங்களை கொண்டிருக்காத ஓய்வூதியக் கோவைகள் மற்றும் வருடாந்தம் பெறப்பட்ட வதிவிடச் சான்றிதழ்களை கொண்ட ஓய்வூதியர்கள் காணப்பட்டனர். எனினும் 2019 ஆம் ஆண்டின் போது இந் நிலைமையை சீர்செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | | எடுக்கப்படும். |
| (ix) வத்தளை பிரதேச செயலகம் | | |
| • 2015 சனவரி 01 இல் 01-227728 ஆம் இலக்க ஓய்வூதியத்திற்குரிய ஓய்வூதியர் 2015 சனவரி 01 இல் இறந்திருந்தார். 2015 சனவரி தொடக்கம் 2016 திசெம்பர் வரை அவரது பெயரில் பேணப்பட்ட வங்கிக் கணக்கிற்கு ரூபா 483,937 தொகை அனுப்பப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 107,621 ஆகும். இறந்த ஓய்வூதியரின் வாரிசு எவரும் கண்டறியப்பட முடியாதிருந்ததால் மீதி அறவிடப்பட முடியாதிருந்தது. | அப்பணத்தை அறவீடு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | நீண்டகாலத்திற்கு மேலாக கணக்குகளில் காணப்படுகின்ற இறந்தவர்களின் ஓய்வூதியங்களுடன் பிரச்சனைகள் எழுகின்றன. வருடாந்தம் வதிவிடச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதை முன்னேற்றுவதன் ஊடாக செலுத்தப்படாத ஓய்வூதியங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவை தொடர்பாக தொடர்ச்சியாக கவனம் செலுத்தப்பட வேண்டுமென பிரதேச செயலாளர் மற்றும் கணக்காளரிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| • உப தபால் அதிபர் ஒருவர் அவரது ஓய்வூதியத்தின் போது ஓய்வூதியத்திற்கு உரித்தில்லாத போதிலும் பிரதேச செயலாளரால் அவரிற்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருந்தது. அதன் மொத்தப் பெறுமதி ரூபா 454,918 ஆகும். அத் தவறு வெளிப்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 46,000 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2014 யூலை 31 இல் ஓய்வூதியர் இறந்திருந்தார். இதனால் ரூபா 408,918 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அத்தொகை வாரிசுகளிடமிருந்து அறவிடப்பட முடியாதிருந்தது. உத்தியோகத்தரின் அலட்சியம் காரணமாக ஏற்பட்ட அந்நட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக புலனாய்வு செய்த போது | கொடுப்பனவிற்குரிய உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் பேணப்பட வேண்டும். | அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பிரதேச செயலாளர் மற்றும் கணக்காளர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

| | | | |
|---|---|---|---|
| | ஓய்வூதியத்தை தயாரித்து சரிபார்த்த உத்தியோகத்தர்களது பெயர் தொடர்பான தகவல்களில்லாமல் கையொப்பங்கள் மாத்திரம் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. 2019 சனவரி 09 இல் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு இது அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அக் கடிதத்திற்கான பதில் 2019 மே மாதம் வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (x) | வத்தளை பிரதேச செயலகத்திற்குரிய ஓய்வூதியர்கள் இறந்தமை தொடர்பாக உடனடியாக அறிவிக்க தவறியதன் காரணமாக 22 ஓய்வூதியர்களிற்கு ரூபா 8,550,748 தொகையான மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொறுப்பான தரப்பினர்கள் இனங்காணப்பட வேண்டியதுடன் மேலதிகக் கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய பிரிவு தவிர்ந்த இடங்களில் ஓய்வூதியர்களின் இறப்பு நிகழ்தல் மற்றும் உறவினர்கள்/ அயலவர்களின் அறியாமை போன்ற காரணங்களினால் ஓய்வூதியர்களின் இறப்பு முறையாக அறிக்கையிடப்படுவதில்லை. எனினும் உரிய பிரிவுகளில் வசிக்கின்ற ஓய்வூதியர்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதன் மூலம் பிரதேச செயலாளரிற்கு அறிவிக்கப்பட வேண்டுமென பிரதேச கூட்டங்களில் கிராம உத்தியோகத்தர்களிற்கு தொடர்ச்சியாக தெரிவிக்கப்படுகின்றன. |
| (xi) | கம்பஹா பிரதேச செயலகத்திற்குரிய 07 ஓய்வூதியர்களின் இறப்பு முறையாக அறிவிக்கப்பட்டிருக்காததால் ரூபா 3,022,081 கூட்டுமொத்தமான ஓய்வூதியங்கள் இறந்த பின்னரும் வங்கி கணக்குகளிற்கு அனுப்பப்பட்டிருந்தன. அப் பணத்தை அறவீடு செய்வதற்கு பொறுப்பான நபர் கண்டறியப்பட முடியாதிருப்பதால் அப்பணத்தின் அறவீடு கேள்விக்குரியதாக உள்ளது. | பொறுப்பான தரப்பினர்கள் இனங்காணப்பட வேண்டியதுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் சுற்றிக்கையின் பிரகாரம் மேலதிக மாவட்டப் பதிவாளர்களிடமிருந்து இறந்த ஓய்வூதியர்கள் தொடர்பான தகவல்களை பெறுவதன் மூலம் ஓய்வூதியங்களை நிறுத்துமாறு உரிய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

| | | | |
|---|---|---|---|
| (xii) | ஓய்வூதிய மோசடி<br>கம்பஹா பிரதேச செயலகத்திற்குரிய 01-603326 ஆம் இலக்க ஓய்வூதியம் மற்றும் 21-500158 ஆம் இலக்க விதவைகள் ஓய்வூதியம் என்பவற்றிற்குரிய நபரொருவர் 2012 மே 30 இல் இறந்திருந்தார். 2012 யூன் தொடக்கம் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதியின் போது அவரது வங்கிக்கு அனுப்பப்பட்ட தொகை ரூபா 2,696,303 கூட்டுமொத்தமாகும். அத்தொகை அவரது மகனால் ATMs ஊடாக மீளப்பெறப்பட்டிருந்தது. அதிலிருந்து ரூபா 250,000 தொகை அவரால் பிரதேச செயலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 2,388,251 ஆன மிகுதித் தொகை இதுவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய தரப்பினர்கள் இனங்காணப்பட வேண்டியதுடன் அதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக தற்போது விசாரணை இடம்பெறுகின்றது. மோசடியாக ஓய்வூதியத்தை பெற்றிருந்த நபர் காவலில் வைக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் இது தொடர்பாக விசாரணை நடாத்தப்படுகின்றது. |
| (xiii) | 07 பிரதேச செயலகங்களுக்குரிய 65 ஓய்வூதியர்களின் இறப்பு 30 நாட்கள் தொடக்கம் 912 நாட்கள் வரையான வீச்சிலான தாமதங்களின் பின்னர் பிரதேச செயலகங்களிற்கு அறிவிக்கப்பட்டிருந்தன. | தாதமதங்களை தவிர்ப்பதற்கு முறையான நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | உரிய பிரிவு தவிர்ந்த இடங்களில் ஓய்வூதியர்களின் இறப்பு நிகழ்தல் மற்றும் உறவினர்கள்/ அயலவர்களின் அறியாமை போன்ற காரணங்களினால் ஓய்வூதியர்களின் இறப்பு முறையாக அறிக்கையிடப்படுவதில்லை. எனினும் உரிய பிரிவுகளில் வசிக்கின்ற ஓய்வூதியர்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதன் மூலம் பிரதேச செயலாளரிற்கு அறிவிக்கப்பட வேண்டுமென பிரதேச கூட்டங்களில் கிராம உத்தியோகத்தர்களிற்கு தொடர்ச்சியாக தெரிவிக்கப்படுகின்றன. |
| (xiv) | மினுவாங்கொடை பிரதேச செயலகத்திற்குரிய 60-62944 ஆம் இலக்க ஓய்வூதியத்திற்குரிய ஓய்வூதியர் 2018 ஆகஸ்ட் 30 இல் இறந்திருந்தார். 2018 | மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டும். | அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக பிரதேச செயலாளர் மற்றும் கணக்காளர் இருவரிற்கும் அறிவுறுத்தல்கள் |

| | | |
|---|---|---|
| செப்தெம்பர் மாத்திற்காக மினுவாங்கொடை மக்கள் வங்கியில் பேணப்பட்ட அவரது சேமிப்புக் கணக்கிற்கு அனுப்பப்பட்ட ரூபா 18,294 தொகை அக் கணக்கிலிருந்து மீளப்பெறப்பட்டிருந்தது. மேலும் 1145015 ஆம் இலக்க ஓய்வூதியத்திற்குரிய ஓய்வூதியர் 2018 செப்தெம்பர் 27 இல் இறந்திருந்தார்.<br>மினுவாங்கொடை மக்கள் வங்கியில் பேணப்பட்ட அவரது சேமிப்புக் கணக்கிற்கு 2018 ஒக்தோபர் மாத்திற்காக ரூபா 21,234 தொகை அனுப்பப்பட்டிருந்ததுடன் அத் தொகையும் அவரது உறவினர்களால் மீளப்பெறப்பட்டிருந்தது. | | வழங்கப்பட்டுள்ளன. |
| (ஆ) அரசாங்கத்தால் உரித்தாக்கப்பட்ட காணிகள்<br>(i) அத்தனகல்ல பிரதேச செயலகம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| விற்பனை அனுமதிக்கப்பட்டிருக்காத போதிலும் சட்டரீதியாக அனுபவிப்பதை மாற்றக்கூடிய தரப்பினர்களிற்கு மானிய உரித்துப் பத்திர பயனாளிகள் அனுபவித்தலை மாற்றலாம். எனினும் பல குடியேற்றங்களில் காசு அடிப்படையில் மானிய உரித்துப் பத்திர பயனாளிகள் அவர்களின் காணிகளை விற்பனை செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. தற்போது மானிய உரித்துப் பத்திர உரிமையாளர்கள் உரிய காணிகளில் வசிக்காதமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக அதிகாரிகள் எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.<br><br>4 குடியேற்றங்களிலுள்ள காணிகளின் பரப்பளவில், 10 பயனாளிகள் அவர்களது காணிகளை விற்பனை செய்திருந்ததுடன் 17 காணிகள் மானிய உரித்துப் பத்திர | மானிய உரித்துப் பத்திர பயனாளிகளிற்குரிய காணித்துண்டுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண காணி ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் 04 குடியேற்றங்களில் (Colonies) உள்ள காணித்துண்டுகள் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | பயனாளிகள் தவிர்ந்த நபர்களால் குடியிருக்கப்படுகின்றன. 7 காணிகள் குடியிருக்கப்படாததுடன் 34 காணிகள் அத்துமீறப்பட்டிருந்தன. | | |
| (ii) | 2018 ஆம் ஆண்டளவில், அரசாங்கத்தால் உரிமையாக்கப்பட்ட காணிகள் தொடர்பாக 14 அத்துமீறிய நபர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். குடியேற்றங்களிற்கு செல்லும் வீதிகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிகளின் பரப்பளவு மற்றும் கால்வாய்கள் மற்றும் நீரோடைகளிற்கான ஒதுக்கீடுகளை அவர்கள் அத்துமீறியிருந்தனர். அத்தகைய காணிகள் தீர்க்கப்பட்டு 2019 பெப்ரவரி 08 வரையிலும் கையேற்கப்பட்டிருக்காத போதிலும் இது தொடர்பாக மீளளிக்கப்பட்ட தீர்ப்புக்களுடன் வழங்குகள் தொடரப்படுகின்றன. | மீட்பிற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும். | அரச காணிகள் (உடமை மீட்பு) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 5 அத்துமீறிய நபர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் அனுபவித்தல் தீர்க்கப்பட்டிருந்தது. 04 அத்துமீறிய நபர்களை வெளியேற்றுவதற்கு மேற்குறிப்பிட்ட அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நீதிமன்ற கட்டளைகள் பெறப்பட்டிருந்தன. இதனால் அப் பணிப்புரைகளை அமுல்படுத்துவதற்காக காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்து நிதியேற்பாடுகள் கோரப்பட்டுள்ளன. இன்னொரு நபரால் அத்துமீறப்படுகின்ற காணித் துண்டை இனங்காண்பதற்கும் அடையாளப்படுத்தலை தயாரிப்பதற்கும் அளவை அத்தியட்சகரிற்கு அளவை வேண்டுதலொன்று அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 62805, 54046 மற்றும் 54047 ஆம் இலக்கங்களின் கீழ் 3 அத்துமீறிய நபர்களிற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெறுகின்றன. அரச காணிகள் (உடமை மீட்பு) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் இன்னொரு அத்துமீறிய நபரிற்கு வெளியேறுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | பிரிவின் குடியேற்றங்களில் அனுமதிப்பத்திரம் அல்லது மானிய உரித்துப் பத்திரம் பெறாமல் அத்துமீறிய | தேவையான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும். | காணி ஆணையாளர் நாயகத்தின் 2008/4 ஆம் இலக்க சுற்றறிக்கையின் |

| | | | |
|---|---|---|---|
| | நபர்களை நெறிப்படுத்துவதற்காக 21 குடியேற்றங்களிலுள்ள 71 காணித் துண்டுகள், ரணவிருகமவிலுள்ள 5 துண்டுகள் மற்றும் அங்கல்தென்ன அரசாங்க காணியிலுள்ள அனைத்து துண்டுகள் தொடர்பாக காணி பயன்பாட்டு திட்டமிடல் குழுவின் அங்கீகாரத்தை பெற்றக்கொள்வதற்காக 2018 சனவரி 25 இல் மாவட்ட காணி பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் அலுவலகத்திடம் கோரப்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 09 வரையிலும் ஒரு குடியேற்றத்திற்காக மாத்திரம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதற்கிணங்க அக் காணிகளை நெறிப்படுத்துவதற்கு காணிக் கச்சேரியை தொடர்பு கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட முடியாதிருந்தது. | | பிரகாரம் பிரிவிலுள்ள 71 காணித் துண்டுகளின் அத்துமீறிய நபர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக காணிகளின் பொருத்தத்தன்மையை பரீட்சிப்பதற்கு 2018 சனவரி 25 இல் மாவட்ட காணி பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் அலுவலகத்திடம் வேண்டப்பட்டிருந்தது. 07 காணித் துண்டுகளிற்கான அங்கீகாரத்தை குழு வழங்கியிருந்த போதிலும் மிகுதி காணித் துண்டுகளிற்கான பரிந்துரைகளை கோரி 2018 நவம்பர் 14 இல் நினைவூட்டலொன்று அனுப்பப்பட்டிருந்தது. உரிய பரிந்துரைகள் பெறப்பட்டதும் காணிக் கச்சேரி முன்மொழிவுகளை தயாரிப்பதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் மாகாணக் காணி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படும். |
| (iv) | அரசாங்கத்தால் உரித்தாக்கப்பட்ட காணிகளிற்காக வழங்கப்பட்ட மானிய உரித்துப் பத்திரங்களுடன் வதிவிடங்கள் வழங்கப்படாமை | | |
| | தொம்பே பிரதேச செயலக பிரிவிலுள்ள அரச உடமையாக்கப்பட்ட காணிகளில் வசிக்கும் குடியிருப்பாளர்களிற்கு வழங்கப்பட வேண்டிய தலைவரால் கைச்சாத்திடப்பட்ட மானிய உரித்துப் பத்திரங்கள் மாவட்டக் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதுடன் அத்தகைய மானிய உரித்துப் பத்திரம் உரிய பயனாளிகளிற்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். கிராம உத்தியோகத்தர்களின் 17 பிரிவுகளிற்குரிய 33 காணித் துண்டுகள் தொடர்பான | பயனாளிகளிற்கு மானிய உரித்துப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த 33 காணித் துண்டுகளிற்குரிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் காலக்கிரமத்தில் மானிய உரித்துப் பத்திரங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்கள் பிரதேச செயலாளர்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் தற்போதைய நிலைமை தொடர்பான கிராம உத்தியோகத்தரின் அறிக்கை 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த போதிலும் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் மானிய உரித்துப் பத்திரங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. | | |
| (v) | வத்தளை பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள 34 குடியேற்றங்களிற்குரிய 43 மற்றும் 24 அனுமதிப்பத்திரங்கள் முறையே 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் அனுமதிப்பத்திரங்கள் பயனாளிகளிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | பயனாளிகளிற்கு மானிய உரித்துப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மிகுதி மானிய உரித்துப் பத்திரங்களை வழங்குவதற்காக எழுத்து மூலமும் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. அம் மானிய உரித்துப் பத்திரங்களை வழங்குவதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | திவுலபிட்டிய பிரதேச செயலகத்திற்குரிய பாடசாலைகள் மற்றும் கட்டிடங்கள் மூடப்பட்டிருத்தல் | | |
| | • 2012 ஆம் ஆண்டில் மூடப்பட்டிருந்த திவுலபிட்டியவிலுள்ள வெலகண பெயரிலான பாடசாலை அரசாங்கத்தால் கையேற்கப்பட்ட பாடசாலைகளின் 1960 ஆம் ஆண்டு எண்ணக்கருவின் கீழ் 75 ஆண்டு காலப்பகுதிக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. ஆரம்ப உரிமையாளரின் பேரன் பாடசாலையை மீட்கக் கோரி 2012 ஆகஸ்ட் 20 இல் திவுலபிட்டிய பிரதேச செயலகத்திற்கு ஆவணங்களை சமர்ப்பித்திருந்தார். எனினும் தீர்க்கப்பட்ட பின்னர் ஆதனத்தை கையளிப்பதற்கு அல்லது செயற்திறனான பயன்பாட்டை | செயற்திறனாக காணியை பயன்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். | அவ் அரசாங்க பாடசாலை பிரதேச செயலகங்களிற்கு தற்காலிகமாக கையளிக்கப்பட்டிருந்தது. மாகாண கல்வித் திணைக்களத்தால் வேண்டப்பட்டதன் அடிப்படையில் காலக்கிரமத்தில் பாடசாலை கையளிக்கப்படும். தற்போது பாடசாலைக் கட்டிடம் பொது நோக்கத்திற்கு பயன்படுத்தப்படுவதற்கு மேலதிகமாக கள அரசாங்க உத்தியோகத்தர்களின் கடமைகளிற்காக பயன்படுத்தப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| • 2019 ஆம் ஆண்டளவில் குளீகீதர ஆரம்ப பாடசாலை அமைக்கப்பட்டிருந்த காணியில் உள்ள கட்டிடத்தில் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் மூடப்படுவதற்கு முதல் கிராம உத்தியோகத்தர் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. புடவைக் கைத்தொழில் திணைக்களம் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றிற்கு ‘‘கப்றுக் புறவர’’ பெயரிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக இக் காணி தேவைப்பட்ட போதிலும் அந் நடவடிக்கை எதற்காகவும் காணி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) செவ பியச | | |
| (i) ரூபா 7,000,000 செலவில் 2017 திசெம்பர் 31 அளவில் மஹர பிரதேச செயலக பிரிவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்த 4 செவ பியச கட்டிட நிர்மாணங்களில் 2 இன் பயன்பாடு 2018 ஒக்தோபர் 15 வரை தாமதமாகியிருந்ததுடன் 2 செவ பியச கட்டிடங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செவ பியச கட்டிடங்களின் தாமதம் மற்றும் பயன்படுத்தப்படாதமை என்பவற்றிற்கான காரணங்கள் விசாரணை செய்யப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு செவ பியசவை அலுவலக ரீதியாக திறப்பதற்காக அறிவிப்பதற்கு எதிர்பார்த்தமை பயன்படுத்தப்படுவதற்கு தாமதமடைந்தமைக்கான காரணமாக உள்ளது. |
| (ii) மினுவாங்கொட பிரதேச செயலக பிரிவில் 1987–2018 காலப்பகுதியின் போது நிர்மாணிக்கப்பட்ட செவ பியச கட்டிடங்கள் தொர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| • எல்லங்கல கிராம உத்தியோகத்தர் | அரசாங்க நிதியேற்பாடுகளை | குறிப்பிட்ட செவ பியசவிலுள்ள |

| | | |
|---|---|---|
| பிரிவிலுள்ள செவ பியச கட்டிடம் ரூபா 300,000 செலவில் 2015 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அக் கட்டிடம் கூரையையும் அத்திவாரம் மீது நிர்மாணிக்கப்பட்ட 4 பீம்களையும் (Beams) கொண்டிருந்தது. தண்ணீர், மின்சாரம் மற்றும் சுகாதார வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் கட்டிடம் இதுவரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திறனாக பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | குறைபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாது என உறுதிப்படுத்தப்படுகின்றது. |
| • வல்பிட்டமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள செவ பியச கட்டிடடம் ரூபா 300,000 தொகையான நிதியேற்பாட்டை பயன்படுத்தி 2015 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. கட்டிடம் 2019 ஆம் ஆண்டு வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. தண்ணீர், மின்சாரம் மற்றும் சுகாதார வசதிகள் காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. | அரசாங்க நிதியேற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | மின்சாரத்தை பெறுவதன் மூலம் பொதுச் சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| • 123/3 யட்டியன கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள செவ பியச கட்டிடத்தின் நிர்மாணம் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அக் கட்டிடம் அரசாங்கத்திற்கு சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்பட்டிருக்காததால் 2018 ஆம் ஆண்டில் அக் காணியின் உரிமையாளர் மினுவாங்கொட பிரதேச செயலாளரிற்கு எதிராக வழக்கொன்றை தொடுத்திருந்தார். | அரசாங்க நிதியேற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.<br><br>காணியின் உரிமைத்துவங்கள் இல்லாமல் நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது எச்சரிக்கப்பட வேண்டும். | அக்காணி அரசாங்கத்திற்கு சொந்தமானது எனக் குறிப்பிட்டு முச்சக்கர வண்டி தரிப்பிடமொன்றை பேணுவதற்கு கிராம மக்களால் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. இந் நிலையில் காணிக்குரிய தகவல்களை கண்டறியும் போது காலத்திற்கு காலம் காணியின் உரிமைத்துவத்தை பல தரப்பினர் கோரியிருந்தனர். எனினும் சட்ட ரீதியான உரிமைத்துவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் குளிப்பதற்கு பொதுவாக |

பயன்படுத்தப்படுகின்ற அக்காணியிலுள்ள கிணறு புனரமைக்கப்பட்டு பொதுமக்களால் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இது உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கட்டிடம் அமைந்துள்ள அடுத்துள்ள காணியின் இணைப்புத்தகம் அக் காணி அரசாங்கத்திற்கு சொந்தமானது என குறிப்பிடுகின்றது. இக் காணி அமைந்துள்ள இடத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ‘‘நிலசெவன’’ நிர்மாணத்திற்கு பொருத்தமான அரசாங்க உரித்தாக்கப்பட்ட காணி இல்லாததன் காரணமாக அக் காணி அரசாங்க உரித்தாக்கப்பட்ட காணியாக கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. ‘‘நிலசெவன’’ தேவைப்பாட்டை மிகவும் வலுவாக உணர்ந்ததன் காரணமாக குடியிருப்பாளர்களால் அத்தகைய உறுதிப்படுத்தல்களுடன் 2017 ஆம் ஆண்டில் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ‘‘நிலசெவன’’ நிர்மாணிக்கப்படுகின்றது.

(உ) அனர்த்த முகாமைத்துவம் – திவுலபிட்டிய பிரதேச செயலகம்

| | | |
|---|---|---|
| (i) முன்னைய சில ஆண்டுகளின் போது கம்பஹா மாவட்டத்தில் பாரிய மற்றும் சிறியளவிலான வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக பிரதேச மட்டத்தில் கால்வாய்களில் தடங்கல்கள் அகற்றப்படாதமை, | வெள்ளத்திற்கு பங்களிக்கக்கூடிய காரணங்கள் இனங்காணப்பட்டு அதன்மூலம் மாற்று நடவடிக்கைகள் பின்பற்றப்பட | இலங்கையிலுள்ள சில மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் காலநிலை மாற்றங்கள் மூலம் வெள்ளம் அதிகரிக்கலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | கால்வாய்களுக்கு வடிந்தோடும் நீரின் முறையற்ற பாய்ச்சல் மற்றும் கால்வாய்களை முறையாக பராமரிக்காதமை என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க 111 கால்வாய்கள் மற்றும் மதகுகள் மீளாய்வாண்டின் போது புனரமைக்கப்பட வேண்டியிருந்ததென அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு திவுலபிட்டிய பிரதேச செயலகம் தகவல்களை சமர்ப்பித்திருந்த போதிலும் 2019 மார்ச் வரையிலும் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | நீர்ப்பாசன திணைக்களத்தால் குறிப்பிட்ட சில கால்வாய்கள் பராமரிக்கப்படுகின்றதுடன் ஏனையவை கமநல சேவைகள் திணைக்களத்தால் பராமரிக்கப்படுகின்றன. நீர் வெளியே பாய்கின்றதுடன் சேர்ந்த கால்வாய்கள் பிரதேச சபை மற்றும் மாநகர சபையால் பராமரிக்கப்பட வேண்டும் என்பதை தெரிவிக்கின்றேன். ஒருங்கிணைப்புக் குழுக்களில் இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் தேவையானவாறு அந் நிறுவனங்களால் நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருக்காதமை காணப்படுகின்றது. எங்களால் பெறப்பட்ட நிதியேற்பாடுகள் உச்சளவு பயன்படுத்தப்படுகின்ற போதிலும் முழுமையான நிதியேற்பாட்டை நாங்கள் பெறுவதில்லை. அதற்கப்பால் இந்த ஆண்டின் போது ஏற்பட்ட வெள்ளங்களின் போது காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் தடைப்பட்ட கால்வாய்கள் புனரமைக்கப்பட்டிருந்தன. வருடாந்தம் இவ் வேலைகள் செயற்திறனாக மேற்கொள்ளப்படுகின்றதை உறுதிப்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட நீர் வெளிப்பாய்ச்சல் ஆகக்குறைந்தது 6 மாதங்களிற்கு ஒரு தடவை புனரமைக்கப்பட வேண்டும். |
| (ii) | தேசிய அனர்த்த மீட்பு சேவைகள் நிலையத்தால் வழங்கப்பட்ட 5 உழவு இயந்திரங்கள் மற்றும் 3 தண்ணீர் பவுசர்கள் 2017 ஆம் ஆண்டில் திவுலபிட்டிய பிரதேச | இந்நிலைமையை விளைவித்த காரணங்கள் விசாரணை செய்யப்பட்டு நடவடிக்கை | அவ்வாகனங்களை திருத்தம் செய்வதற்கு நிதியேற்பாடு கோரப்பட்டுள்ளது. நிதியேற்பாடு வழங்கப்பட்டதும் |

| | | |
|---|---|---|
| செயலகத்தால் பெறப்பட்டிருந்தது. உமா ஓயா செயற்திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக குடிநீர் வழங்குவதற்கு முழுமையாக பயன்படுத்தப்பட்டிருந்த உழவு இயந்திரங்கள் மற்றும் 3 தண்ணீர் பவுசர்கள் மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் பதுளை மாவட்டச் செயலாளரிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 05 இல் முறையற்றவாறு மீளளிக்கப்பட்ட அம் மூன்று வாகனங்களும் கடுமையாக சேதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ் வாகனங்கள் திருத்தப்படாமல் பயன்படுத்தப்பட முடியாதிருந்தன. எனினும் 2019 மார்ச் வரையிலும் அவ் வாகனங்கள் அந் நிலைமையிலேயே காணப்பட்டன. | எடுக்கப்பட வேண்டும். | திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ------------------------------------------ | ------------------ | -------------------------------------------------- |
| தற்காலிக அளவீடு ஒன்றாக மாத்திரமும் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிரந்தர நியமனமொன்று மேற்கொள்ளப்படும் வரையும் பதிற்கடமை நியமனம் மேற்கொள்ளப்பட முடியும். பதவிக்கு முழுநேர உத்தியோகத்தரொருவரின் தேவைப்பாடு விடயத்தில் நிலையான நியமனம் உடனடியாக வழங்கப்பட வேண்டும். அதற்கு முரணாக 7 பிரதேச செயலகங்களிற்குரிய 81 கிராம உத்தியோகத்தர்களிற்கு பதிற்கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிரந்தர உத்தியோகத்தர் இது தொடர்பாக நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிரந்தர உத்தியோகத்தர்கள் உடனடியாக நியமனம் செய்யப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதியளவு ஊழியர்கள் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்காததால் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டவாறு தாபன விதிக்கோவை ஏற்பாடுகளிற்கு முரணாக பதிற்கடமை நியமனங்களை மேற்கொள்வது தவிர வேறு மாற்றுத்தீர்வு காணப்படவில்லை. |